**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**PW1- OS. No. 250/2017**

2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 4ம் நாள் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு, லோகநாதன் | தொழில் : |
| த/பெ. : திரு, தங்கராஜ் | வயது : 57 |
| முகவரி : | |

**வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இந்த வழக்கில் வாதி. எனது தரப்பு சாட்சிக்காக கூடுதல் நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். 1.2.2008 தேதிய கூட்டாண்மை பத்திரம் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (பிரதிவாதி தரப்பில் அது மோசடியாக தயாரிக்கப்பட்டுள்ளது என ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) 16.4.2008 தேதிய தொழில் கூட்ட நிறுவன பதிவு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.8.2015 தேதிய வங்கியில் இருந்த அனுப்பப்பட்ட கடிதம் 1ம் வாதிக்கு தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 5.9.2013 தேதிய இன்வாய்ஸ் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2.1.2014 தேதிய திருப்பூர் தெற்கு காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.3.2014 தேதிய திருப்பூர் மாநகர காவல் ஆணையருக்கு அளிக்கப்பட்ட புகார் மனு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.2.2014 தேதியில் 1ம் பிரதிவாதி மூலம் ஆடிட்டருக்கு அனுப்பப்பட்ட கோரிக்கை லேட்டர் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.4.2014 தேதியில் ஆட்டிடர் அனுப்பிய Balance

sheet தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டஅசல் வழக்கு எண் 361/2014 பிராது சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 7.11.2014 தேதிய திருப்பூர் தெற்கு காவல் நிலையத்தில் அனுப்பப்பட்ட விசாரணை அறிவிப்பு அழைப்பாணை உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2.7.2014 தேதியில் திருப்பூர் மாநகர காவல் ஆணையாளருக்கு அளித்த புகார் மனு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 7.10.2014 தேதியில் திருப்பூர் மாநகர காவல் ஆணையாளருக்கு அளித்த புகார் மனு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.10.2016 தேதிய திருப்பூர் தெற்கு காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட விசாரணை அறிவிப்பு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.10.2016 தேதிய திருப்பூர் தெற்கு காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட விசாரணை அறிவிப்பு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. டி.ஆர்.டி நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த மனு எண் 1541/2016 OA195/2016 சான்றளிக்கப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1–2 பிரதிவாதிக்கு எதிராக திருப்பூர் குற்றவியல் நீதிதுறை நடுவர் முன்பாக 28/2016 ல் தாக்கல் செய்யப்படட இறுதி அறிக்கை சான்றளிக்கப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1–2 பிரதிவாதிக்கு எதிராக மாநகர குற்றப்பிரிவில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை சான்றளிக்கப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.

அது வாதி தரப்பில் வா.சா.ஆ 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தரப்பு சாட்சியினை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

**குறுக்குவிசாரணை மனு அனுமதியின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது**

| |
|---|
| சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.<br><br>ஒம்/– M.மேகலாமைதிலி<br>கூடுதல் சார்பு நீதிபதி,<br>திருப்பூர். |